தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 6, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022, ஏப்ரல் 19, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்."

காட்சிக்கு எளிமையும், கடுஞ்சொல் கூறாத இனிய பண்பாடும் உடைய அரசைத்தான் உலகம் புகழும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

122—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***12026—திரு. ஆர். கணேஷ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் தொகுதி, குந்தா வட்டம், மஞ்சூரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2022 ஏப்ரல் 19*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உதகமண்டலம் தொகுதி அமைந்திருக்கும் நீலகிரி மாவட்டத்தில் ஒரு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் ஒரு அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவை இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், உதகமண்டலம் தொகுதி, மஞ்சூரில் புதியதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.*

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சூர் வட்டாரத்தில் உள்ள 3,000 குடும்பங்கள் கேரளாவை ஒட்டியிருக்கின்றன. அங்கு 50 ஆண்டு காலமாக குடிதண்ணீர் பிரச்சினை இருந்தது. அதனை முதன்முதலாக மரியாதைக்குரிய முதல்வர் அவர்களின் ஒப்புதலோடு கிட்டத்தட்ட ரூ.5 கோடியே 45 இலட்சம் நிதியினை குடிதண்ணீருக்கென்று ஒதுக்கீடு செய்து 3,000 குடும்பங்களைக் காப்பாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இதனைப் போராடி பெற்றுத்தந்த மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஒரு கல்லூரியில் கூடலூர் மற்றும் குன்னூர் பகுதியில் உள்ள அனைவரும் சேர்ந்து படிக்கக்கூடிய நிலை உள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முதலாவதாகக் கூறிக்கொள்கிறேன். மாணவர்களுக்கு கோத்தகிரியில் ஒரு Private College*–ம், உதகமண்டலத்தில் ஓர் அரசு பாலிடெக்னிக் கல்லூரியும் உள்ளது. மலை மாவட்டத்தில் 30 கி.மீ., 40 கி.மீ. தூரம் என்று நாம் அதிக தூரம் பயணிக்க வேண்டியிருப்பதால், தயவுசெய்து ஒரு பாலிடெக்னிக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும். எதிர்காலத்தில்* I.T. Park *வரும்போது நிச்சயமாக மாணவர்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும் என்பதால் இதனை அமைத்துத் தர, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

2022 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப்போல பல உறுப்பினர்களும் அவரவர் தொகுதிகளில் அரசு கலைக் கல்லூரிகள் வேண்டும், பாலிடெக்னிக் கல்லூரிகள் வேண்டும் என்றெல்லாம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முதலிலேயே அறிவித்திருக்கிறார்; கல்வியும், சுகாதாரமும் என் இரு கண்கள் போன்றவை என்று அறிவித்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம். அதனால்தான் அவர் சென்ற ஆண்டு 21 அரசுக் கல்லூரிகளைக் கொடுத்து, இந்த ஆண்டும் பத்து புதிய அரசு கலைக் கல்லூரிகளைத் துவக்க அனுமதி அளித்திருக்கிறார்கள். இவையெல்லாம் தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, பாலிடெக்னிக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், தற்போது மாணவர்கள் அதிகமாகச் சேர்வதில்லை என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, உதகமண்டலத்தைப் பொறுத்தவரையில், அங்கு மொத்தமாக அரசுக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 360 பேர். இந்த 360 பேரில் எவ்வளவு பேர் சேர்ந்திருக்கிறார்கள் என்று சொன்னால், 151 பேர்தான் சேர்ந்திருக்கிறார்கள். 209 இடங்கள் காலியாக உள்ளன. அரசு உதவிபெறும் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 240; அதில் 114 பேர்தான் சேர்ந்திருக்கிறார்கள். 126 இடங்கள் காலியிடங்களாக உள்ளன. ஆக மொத்தம் 750 இடங்களில் 265 இடங்களில்தான் மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். 485 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதனால்தான் அந்த பாலிடெக்னிக் கல்லூரிகளிலும் அதிக மாணவர்கள் சேர வேண்டும் என்ற அடிப்படையில் தமிழக முதல்வர் அவர்கள் 'நான் முதல்வன்' என்ற திட்டத்தினை அறிவித்து பாலிடெக்னிக் கல்லூரிகள்,* Engineering *கல்லூரிகளிலெல்லாம் தொழிற்பயிற்சி துவங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்; வேலை கிடைக்க வேண்டும் என்றால் அதிகம் பேர் அதில் சேர்வார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன்பேரில் அதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறோம். நிச்சயமாக வருங்காலங்களில் இதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[*2022 ஏப்ரல் 19*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.*

முற்பகல் 10–05

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 200–வது ஆண்டைக் கடக்கும் உதகமண்டலம் நகராட்சிக்குக் கிட்டத்தட்ட ரூ.10 கோடியை அறிவித்து நலத் திட்ட உதவிகளை வழங்க ஆவன செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காந்தல் பகுதியில் 15,000 முதல் 20,000 பேர் வரை மக்கள் வசிக்கின்றனர். அங்கு மட்டும் 7* Councillors *வந்துவிடுகிறார்கள். அங்குள்ள* Bennet Market*–ல் ஒரு பெரிய அரங்கம் அமைத்து, கலைஞர் கலையரங்கம் என்று பெயர் போட்டு எங்களுக்கு கலைஞர் அவர்களின் நினைவாக சமுதாயக் கூடம் கட்டித் தரப்பட வேண்டும். ஏழை மக்கள், பட்டியலின மக்கள்,* minority people *மற்றும் அனைத்துச் சமுதாய மக்களுக்கும் இது உதவியாக இருக்கும். சமுதாயக் கூடம் போன்றுள்ள மண்டபங்களுக்கு வெளியில் ரூ.50,000/– முதல் ரூ.1,00,000/– வரை வாடகை கேட்கிறார்கள். சின்ன சின்ன குடிசைகளில் வாழ்கின்ற மக்கள், ஏழை மக்கள் சமுதாயக் கூடம் இல்லாமல் கல்யாணம் போன்ற நிகழ்ச்சி எதையும் நடத்த முடியாமல் இருக்கிறார்கள். இதற்காக 2 கோடி ரூபாய்க்கு* estimate *தயார் செய்யப்பட்டு,* Municipality*–ல்* ready *ஆகியிருக்கிறது. தயவுசெய்து, அந்த 2 கோடி ரூபாயை, ஏற்கெனவே அறிவித்த 10 கோடி ரூபாயோடு கூடுதலாக* allot *செய்து,* Bennet Market *மற்றும் காந்தல் பகுதியில் உள்ள 7 வார்டுகளுக்கும் சேர்த்து, ஒரு சமுதாயக் கூடத்தை கட்ட வேண்டும். இதன்மூலம் அந்த வருமானமும் நகராட்சிக்குக் கிடைக்கும். மேலும், அனைத்துக் கடைகளையும் அமைத்து,* parking *வசதியையும் அமைத்துத் தருமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன். நம்முடைய, 100 ஆண்டு பழமை வாய்ந்த கலைக் கல்லூரிக்கு ஒரு* compound *சுவர் கண்டிப்பாக கட்டித் தர வேண்டும். முதலை போன்ற அனைத்து விலங்குகளும் உள்ளே வந்து சென்று கொண்டிருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரே கேள்வியில் ஒரு* Debate*–ஐப் பேசி முடித்துவிட்டீர்கள்.*

திரு. ஆர். கணேஷ்: *முடித்துவிட்டேன்.* B.B.A., B.C.A., B.Com., (C.A.), B.Com., (I.B.), Microbiology, Zoology, *தமிழ்வழிப் படிப்பு,*

2022 ஏப்ரல் 19]

Computer Science, Ph.D., *படிப்புகள் அங்கே துவங்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் எனக்குப் புரிகிறது. நியாயமான கோரிக்கைகள்தான். ஆனால், இன்று நிதிநிலையையும் பார்க்க வேண்டும்; மாணவர்களின் சேர்க்கையையும் பார்க்க வேண்டும். குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில்* Polytechnic *கல்லூரிகளில் 1,67,616 இடங்கள்* sanction *செய்யப்பட்டிருக்கின்றன. உங்களுடைய மாவட்டம் மட்டும் கிடையாது, மொத்தம் நிரப்பப்பட்டு இருக்கின்ற இடங்கள் 56,801 இடங்கள்தான். காலியிடங்கள் 1,10,815 இருக்கின்றன. அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். இவற்றையெல்லாம் நிரப்ப வேண்டும். பொறியியல் கல்லூரிகளில் உள்ள இடங்களையெல்லாம் நிரப்ப வேண்டுமென்பதற்காகத்தான், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 'நான் முதல்வன்' திட்டத்தை அறிவித்தார்கள். அதில், தொழில் துறை, உயர் கல்வித் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை ஆகிய 3 துறைகளையும் இணைத்து, 'நான் முதல்வன்' திட்டத்தை தலைவர் உருவாக்கியிருக்கிறார். வருங்காலங்களில் அவையெல்லாம் உருவாக்கப்படும். நீங்கள் கேட்ட அரசுக் கல்லூரிகளுக்கான* compound *சுவர், அதற்கும் தலைவர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். ஏற்கெனவே உள்ள 6 கல்லூரிகள், சென்ற வருடம் அறிவித்த 10 கல்லூரிகள், ஆக மொத்தம் 16 கல்லூரிகளுக்குப் புதிய கட்டடம் கட்டப்படுவதோடு, இந்த ஆண்டு உருவாகியிருக்கிற 10 கல்லூரிகளுக்கும் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.*

உள் கட்டமைப்புகளைச் சீர் செய்வதற்காக 55 கல்லூரிகளுக்கு அனுமதி அளித்திருக்கிறார். ஆகவே, அந்தக் கல்லூரியிலும் உள் கட்டமைப்புகளைச் சீர் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். நீங்கள் சொன்னது போன்று, compound *சுவர் உண்மையிலேயே அங்கே அவசியம் என்று சொன்னால், நிச்சயமாக அந்தக் கல்லூரியின் முதல்வரைக் கலந்தாலோசித்து அதைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் மையப் பகுதியில், கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இடமும் தேர்வு செய்யப்பட்டு, இன்னும் கட்டடம் கட்டப்படாத நிலை உள்ள காரணத்தினால், மாணவர்கள் அங்கே வாடகைக் கட்டடத்தில் படித்து வருகிறார்கள். அவர்கள் ரோட்டில் இறங்கி போராடுகின்ற **நிலை ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலித்து, உடனடியாக அந்தக் கட்டடத்தைக் கட்டி முடித்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு முந்தைய பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டு, கட்டடம் கட்டப்படாத இடங்களுக்கும் சேர்த்துதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 6 கல்லூரிகளில் அதுவும் அடங்கும் என்று நான் கருதுகிறேன். 16 கல்லூரிகளிலேயும் கட்டடங்கள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். அந்தமாதிரி குறைபாடுகள் இருக்குமானால், அந்தக் கல்லூரிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காக 55 கல்லூரிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். ஆகவே, கள்ளக்குறிச்சியைப் பொறுத்தவரையில் அந்தப் பணி வேகமாக, விரைவாகச் செயல்படுத்தப்படுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2022 ஏப்ரல் 19]

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் என்னுடைய பண்ருட்டி தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தர முடியுமா என்று கேட்டேன். அடுத்த ஆண்டு அமைத்துத் தருவேன் என்று சொன்னார். இந்த ஆண்டும் அதற்கான அறிவிப்புகள் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, தயவுசெய்து இந்த ஆண்டு எனது தொகுதிக்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை உருவாக்கித் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்குத்தான் ஆரம்பத்திலேயே சொன்னேன். இது, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்களின் கோரிக்கை மட்டுமல்ல, இங்கேயிருக்கிற உறுப்பினர்கள் எல்லோரும் கேட்டிருக்கிறார்கள். முடிந்தவரையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, உண்மையிலேயே அரசுக் கல்லூரிகளே இல்லாத தொகுதிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில், இந்த ஆண்டும் 10 கல்லூரிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. பண்ருட்டியைப் பற்றி எங்களுக்கு நன்றாகத் தெரியும். பண்ருட்டிக்கு அருகில் கல்லூரிகள் இருக்கின்றன. வடலூரிலும் இந்த ஆண்டு கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது. வடலூருக்கும் பண்ருட்டி பகுதிக்கும் அதிக தூரம் இல்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். அந்தத் தொகுதியில் கல்லூரிகள் இல்லாமல் இருக்குமேயானால், வருகின்ற காலங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு இந்த அரசு வழிவகை செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.*

திரு. க. கணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டுமென்று நான் ஏற்கெனவே பேசியிருக்கிறேன். இன்றைக்கு ஒன்றை நினைவுபடுத்த நான் கடமைப்பட்டிருக்கின்றேன். 'சொன்னதையே செய்யக்கூடிய அரசு; செய்வதையே சொல்லக்கூடிய அரசு' நம்முடைய கழக அரசு. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தின்போது இரண்டு முறை என்னுடைய தொகுதிக்கு வருகை தந்தார்கள். அப்போது, தேர்தல் வாக்குறுதியாக, அங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்படும் என்ற உறுதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொகுதி மக்களிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். அதற்கெல்லாம் மேலாக, தேர்தல் அறிக்கையிலும் சொல்லியிருக்கிறோம். எனக்கு இருக்கின்ற பிரச்சினை என்னவென்று சொன்னால், இதைத் தொடர்ந்து மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியைக் கேளுங்கள். எந்த இடத்தில் கல்லூரி வேண்டுமென்று கேளுங்கள்.*

திரு. க. கணபதி: *என்னுடைய தொகுதியில், அடையாளம்பட்டு ஊராட்சியில் 6 ஏக்கர் இடம் தயாராக இருக்கிறது. அதற்காகவே இடம் தயார் செய்யப்பட்டுவிட்டது. அதேபோன்று, 15 நாட்களுக்கு முன்னால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எந்த இடத்தில் கல்லூரி வேண்டுமென்று கேளுங்கள். அதற்குப் பதில் சொல்வார்கள்.*

திரு. க. கணபதி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை அழைத்துச் சென்று, கோயில் சொத்துகளில் 18 ஏக்கர் இடம் தொகுதியின் நடுப்பகுதியில் இருப்பதையும் அவர்களிடம் காண்பித்திருக்கிறேன். ஆகவே, இடத்தைப் பொறுத்தவரையில் அந்தத் தொகுதியில் பிரச்சினை இல்லை. ஆகவே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கல்லூரி ஆரம்பிக்கப்படுமா என்று கேளுங்கள்.*

திரு. க. கணபதி: *கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

2022 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் எங்கு வேண்டுமானாலும் கிடைக்கும். கட்டடம் கட்டுவதற்கான நிதி வேண்டும், தொடர் செலவினங்கள் இருக்கின்றன, ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட வேண்டும். ஒரு கல்லூரி துவங்கப்பட வேண்டுமென்றால் வருடத்திற்குக் கிட்டத்தட்ட ரூ.20 கோடி அதற்குச் செலவாகும். அந்த அடிப்படையில், நிதிநிலையைப் பொறுத்து, வருகின்ற காலங்களில், உடனடியாக அந்தக் கல்லூரியை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். கூடலூர் பகுதி மக்களின் பன்னெடுங்காலக் கோரிக்கையாக இருந்த ஒரு கலைக் கல்லூரியினை கடந்த 2003 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமைத்துக் கொடுத்தார்கள். கடந்த 2019 ஆம் ஆண்டில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அரசு கலைக் கல்லூரியாக மாற்றிக் கொடுத்தார்கள். தற்பொழுது சுமார் 3,500 மாணவர்கள் பயிலக்கூடிய வகையில், அந்தப் பகுதி மக்களின் அட்சயபாத்திரமாக அந்தக் கல்லூரி விளங்கிக் கொண்டிருக்கிறது. உலகின் அரிய வகைத் தாவரங்கள் இருக்கக்கூடிய நீலகிரி மாவட்டத்தின் உயிர்ச்சூழல் மண்டலத்தின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக கூடலூர் பகுதி இருக்கிறது.* Endemic, endangered, rare, extinct *என இருக்கக்கூடிய. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வி கேளுங்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *பல்வேறு வகைத் தாவரங்கள் இருக்கக்கூடிய. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், என்ன வேண்டுமென்று கேளுங்கள்.*

[2022 ஏப்ரல் 19

திரு. பொன். ஜெயசீலன்: *2,000 வகை தாவரங்கள் இருக்கக்கூடிய பகுதியாக கூடலூர் இருக்கிறது. பல்வேறு விலங்கினங்களும் அந்தப் பகுதியில் இருக்கின்றன. ஆனால், அந்தக் கல்லூரியில் மாணவர்கள் தாவரவியலையும், விலங்கியலையும் படிப்பதற்கான பாடப் பிரிவுகள் இல்லை. எனவே, தயவுகூர்ந்து, தாவரவியல், விலங்கியல், வேதியியல், தமிழ் இலக்கியம் ஆகிய பிரிவுகளை இந்த ஆண்டே தொடங்கிட வேண்டும். கல்லூரிக்குப் போதுமான கட்டடங்கள் இருக்கின்றன. தேவைப்பட்டால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கூடுதல் கட்டடங்களை அமைத்துக் கொடுப்பதற்கு நானும் தயாராக இருக்கிறேன். தயவுகூர்ந்து, வருகின்ற கல்வியாண்டில் இந்தப் பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு அனுமதி தர வேண்டுமாய் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி வேண்டும்; உட்கட்டமைப்புகள் வேண்டும்; அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல்,* additional courses *வேண்டுமெனக் கேட்கிறார்கள். நான் முதலிலேயே சொன்னதுபோன்று, ஒவ்வொரு கல்லூரியிலும் பாடப் பிரிவுகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைதான் இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் அதற்கான அனுமதியை அளித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு பல கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்படவிருக்கின்றன. குறிப்பாக,* Ph.D., *பிரிவை 10 கல்லூரிகளில் உருவாக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுமதியளித்திருக்கிறார்கள். அதேபோன்று,* Post–Graduate Courses, Undergraduate Courses*–ஐ பொறுத்தவரையில்,* Botany course*–ஐ அங்கு தாவரங்கள் அதிகமுள்ள பகுதி என்பதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அவற்றைப் பற்றியெல்லாம் பரிசீலிக்கப்படும். அந்தக் கல்லூரிகளின் முதல்வர்கள்* Director of Collegiate Education*–ஐ வந்து சந்தித்தால், கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் மூலமாகவும், பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்கள் மூலமாகவும் அதுகுறித்து ஆலோசித்து, புதிய பாடப் பிரிவுகளை யார், யார் கேட்டிருக்கிறார்களோ, அந்தக் கல்லூரிகளில் புதிய*

2022 ஏப்ரல் 19]

பாடப் பிரிவுகள் தொடங்கப்படும். அனைத்திற்கும் செலவுதான் அதிகம் ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கான செலவை ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கின்ற காரணத்தினாலும், அங்கு இடவசதி இருக்கின்ற காரணத்தினாலும், அதற்கான ஆசிரியர்கள் நியமிக்க வேண்டியுள்ள காரணத்தினாலும், கூடிய விரைவில் அவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

123—

புறவழிச் சாலை

***289—திரு. சு. ரவி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டைக்கு புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டைக்கு புறவழிச் சாலை அமைக்க அவசியம் ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

முற்பகல் 10–15

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட செம்பேடு ஊராட்சியைச் சேர்ந்த குருவராஜப்பேட்டை கிராமம், சுமார் 30,000 மக்கள்தொகை கொண்ட மிகப் பெரிய கிராமம். இந்தச் செம்பேடு ஊராட்சியை*